**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 46 of 2024 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ஜார்ஜ் சுந்தர்ராஜன்

Father's Name : தாமஸ் கோவில்பிள்ளை

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st **day of July** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் கவிதா மருத்துவமனை என்ற பெயரில் மருத்துவமனை வைத்து மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தில் இறந்து போன பிரசில்லா எனது மனைவி. சம்பவத்தில் இறந்து போன மற்றொரு நபர் எதிரியின் மனைவி ஆவார். கடந்த 22.01.2023 ம் தேதியன்று எனது தங்கை மற்றும் அக்கா அவர்களை பார்ப்பதற்காக கோவை சென்று இருந்தேன். மீண்டும் 23.01.2023 ஆம் தேதி இரவு சுமார் 11 மணியளவில் என்னுடைய maruti ciaz என்ற TN 78 C 5533 காரில் நான், எனது மனைவி மற்றும் எனது மகன் மூவரும் நான் காரை ஓட்ட எனது மனைவி எனது அருகில் அமர்ந்திருந்தார். எனது மகன் பின் இருக்கையில் அமர்ந்திருந்தார்.

2. நான் சூலூர் கே எம் சி எச் மருத்துவமனை தாண்டி வந்த பொழுது எனது மனைவியிடம் இன்றைய தினம் அதிக போக்குவரத்து இல்லை. ஆகவே 12 30 மணியளவில் நாம் வீட்டிற்கு சென்று விடலாம் என கூறிக்கொண்டு AIR FORCE தாண்டி சென்ற பொழுது ரோட்டின் நடுவில் உள்ள தடுப்புச் சுவர் பெரிய அளவில் கிடையாது. சிறிய 3 TO 6 INCH அளவில் மட்டுமே உள்ளது. ஆனால் ரோட்டின் மீடியன் அளவு சுமார் 6 அடி இருக்கும்.

3. நான் வளைவான பகுதியில் சென்று கொண்டிருந்த பொழுது நான் ரோட்டின் வலது புறமாக உள்ள சாலையில் சென்று கொண்டிருந்தேன். எதிர் திசையில் வந்த MARUTI SWIFT CAR எதிர் திசையில் இருந்து சாலையின் தடுப்பு சுவரை தாண்டி வந்து நான் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது வேகமாக வந்து மோதி விட்டது. விபத்து நடந்தவுடன் நான் பகுதி சுயநினைவு இழந்து விட்டேன். காரின் அனைத்து கதவுகளும் திறக்க முடியாத நிலையில் ஆனது. எனக்கு விலா எலும்புகள் அதிக அளவில் முறிந்து விட்டது. நான் மூச்சு விட இயலாமல் சத்தம் போட்டேன். எனது மகன் பின் இருக்கையில் இருந்தவர் மோதிய வேகத்தில் எனது இருக்கையில் வந்து விழுந்து விட்டார். அவருக்கு வலது காலில் இரண்டு எலும்புகள் முறிந்து விட்டன. எனக்கு இடது கால் முட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மேலும் எனக்கு இடுப்பு எலும்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனக்கு வயிறில் பெரிய LACERATION ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் என்னையும் எனது மகனை காரின் வலது புறமாக இருந்து இறக்கி ரோட்டில் அமர வைத்தார்கள். எனது மனைவியை காரின் இடது புறமாக முன் பக்க கதவில் இருந்து இறக்கி ரோட்டில் அமர வைத்தார்கள்.

4. நானும் எனது மகனும் எனது மனைவியை பற்றி விசாரிக்க அங்கிருந்த பொதுமக்கள் அவர் சுயநினைவு இன்றி இருந்ததால் அவரை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்திருப்பதாக தெரிவித்தார்கள். மேலும் என்னையும் எதிரியின் மனைவியையும் ஒரு ஆம்புலன்சிலும் எனது மகனை மற்றொரு ஆம்புலன்சிலும் ஏற்றி முத்தூஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அரசு மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர்கள் எனது மனைவி வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்ததாக என்னிடம் கூறினார்கள்.நானும் எனது மகனும் ஏற்பட்டநானும் எனது மகனும் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டோம். எதிரியின் மனைவி சிகிச்சை முடிந்த பொழுது சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். விபத்தை ஏற்படுத்திய நபரை நான் சம்பவத்தின் பொழுது பார்க்கவில்லை. அதன் பின்னிட்டு அவர் என்னை வந்து பார்த்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பொதுவாக ஒரு செயலை செய்யக்கூடிய நபர் அதனையே மீண்டும் செய்வார் அதனை அனிச்சை செயல் என கூறுவார்கள் என்றால் சரிதான். சூலூரில் இருந்து தாராபுரம் சுமார் 65 கிலோ மீட்டர் இருக்கும். போலீசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக இரண்டு முறை விசாரித்தார்கள்.

தேதி, ஞாபகம் இல்லை. சூலூர் காவல் நிலையத்திலும் என்னை அழைத்து விசாரித்தார்கள். என்னை இரண்டு முறை விசாரித்ததாக சொல்லி உள்ளேன். மேற்படி இரண்டு முறையும் எத்தனை நாட்கள் இடைவெளி இருக்கும் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது மகன் தான் புகார் கொடுத்தார். மருத்துவமனையில் இருந்த பொழுது எனது மகன் புகார் அளித்தார். எனது மகன் புகார் அளித்த விபரம் எனக்கு தெரியும். எனது மகன் புகாரில் அளித்துள்ள விபரங்கள் உண்மையான விபரங்களா அல்லது பொய்யான விபரங்களா என்றால் உண்மையான விபரங்கள் மட்டும்தான் புகாராக கொடுத்தார்.

2. எனக்கு கார் ஓட்ட ஓட்டுனர் உரிமம் உண்டு. புகாரில் எனது மகன் நான் கோவையில் மருத்துவமனை நடத்தி வருவதாக சொல்லி உள்ளாரா என்றால் நான் அவ்வாறு எந்த மருத்துவமனையும் கோவையில் நடத்தவில்லை. மேற்படி எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் இருந்த எதிரியின் இரண்டு குழந்தைகளுக்கும் விபத்தில் கொடுங்காயங்கள் ஏற்பட்டன என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் சுமார் 10 முதல் 15 நிமிடத்திற்குள் எங்களை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் ஏற்றினர். விபத்து ஏற்பட்டதாக சொல்லக்கூடிய பகுதி குடியிருப்புகள் நிறைந்த பகுதி இல்லை என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. சம்பவத்தின் பொழுது காரை எனது மகன் ஓட்டினார் என்றால் சரியல்ல, நான் தான் ஓட்டினேன்.

3. எனது மகன் சுமார் 15 வருடங்களாக அமெரிக்காவில் மருத்துவராக பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். அமெரிக்கா மற்றும் இந்தியாவில் வாகனங்களை ஓட்டுவதற்கு வெவ்வேறு விதிமுறைகள் என்றால் சரிதான். எனது மகன் அமெரிக்காவில் வலது புறமாக காரை இயக்கி பழகிய நபர் என்பதால் இங்கும் அன்றைய தினம் அவர் சாலையின் வலது புறமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல, அன்றைய தினம் நான் தான் காரை ஓட்டினேன். நான் சம்பவ இடத்திலிருந்து நானும் எனது மகனும் கோவை அரசு மருத்துவமனை முதலில் சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டதாக சொல்லி இருந்தால் தவறு என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு எனது மகன் அமெரிக்காவில் இயக்குவதைப் போல காரை இந்தியாவிலும் இயக்கி சென்றதால் தான் எதிரியின் மனைவி, அவரது குழந்தைகள் மற்றும் எங்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4. எனது மனைவி காரின் பின் இருக்கையில் அமர்ந்து வந்தார் என்றால் சரியல்ல. நான் காரை ஓட்டினேன். அவர் எனது அருகில் அமர்ந்து வந்தார். நானும் எனது மகனும் சீக்கிரம் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்ற காரணத்தால் எனது மகன் வேகமாக வாகனத்தை இயக்கியதால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி விபத்தில் படுகாயம் அடைந்து நான்கு, ஐந்து நாட்கள் சுயநினைவு இன்றி இருந்தார் என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. விபத்து

சம்பந்தமாக எதிரியின் மகள் காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.07.21 18:31:31 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**